MR. SPEAKER : We shall postpone question No. 803 till the Hon. Minister for Industries comes.

Electricity charges (Ryots—North Arcot)

*804 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : கனம் மின்சார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) விவசாயிகளின் உபயோகத்திற்கான மின்சாரத்திற்கு வருடாந்திரக் குறைந்த கட்டணம் எத்தனை சதவிகிதம் வடஆற்காடு ஜில்லாவில் வசூலாகிறது ?

(இ) குடியாத்தம் தாலூகாவிலுள்ள ஸ்கீம்களுக்கு, ஸ்கீம்வாரியாக எத்தனை சதம் வசூல் செய்யப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) & (*b*) The attention of the Hon. Member is invited to the answer[a] placed on the table of the House.

SRI V. K. KOTHANDARAMAN : பத்து சதவிகிதம் வசூலாகக்கூடிய ஒரு திட்டத்திற்கு டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூலிக்க வேண்டுமென்ற விதி இருக்கிறதே. அந்த அடிப்படையிலே வசூலிக்கப்படவில்லை என்பது சர்க்காருக்குத் தெரியுமா ? அதற்காக ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON SRI V. RAMAIAH : டாரிப் கிராண்ட் அடிப்படையிலே வசூல் செய்யப்பட்டு விதிவிலக்கு கொடுக்கப்பட்டு அங்கங்கே ஸ்கீம் போட்டு அன்கனெக்டட் மினிமம் சார்ஜ் ஏற்பட்டிருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : குடியாத்தம் தாலூகாவில் சேத்துவண்டை, அம்மணாங்குப்பம் போன்ற இடங்களில் 10 சத விகிதத்திற்கு வசூலாக்கக்கூடிய நிலைமையில் மேற்படி டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்கப்படுகிறதா ? இது போன்று 10 சத விகிதத்திற்குமேல் வசூலிக்கும் பிரதேசங்களில் டாரிப் கிராண்ட் அடிப்படையில் வசூலிக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

THE HON. SRI V. RAMAIAH : ஒரு ஸ்கீம் பூர்த்தியாகி 10 சத விகிதத்திற்குமேல் வருமானம் எவ்வளவு என்று கவனித்து எடுத்துக்கொள்கிறார்கள். இதைத்தான் வசூல் செய்கிறார்கள். ஒரு கட்டுபடியான நிலைமை ஏற்பட்டால் இந்த அடிப்படையிலே வசூல் செய்கிறார்கள்.

SRI S. M. ANNAMALAI : இப்பொழுது முற்பட்ட பகுதி என்றும், பிற்பட்ட பகுதி என்றும், முற்பட்ட பகுதிக்கு 40 ரூபாய் விகிதமும் பிற்பட்ட பகுதிக்கு 35 ரூபாய் விகிதமும் வசூலிக்கிறார்கள். இந்த ஸ்டேட்மென்டில் பார்க்கும்போது வட ஆற்காடு மாவட்டம் முற்பட்ட பகுதியாக கருதப்பட்டு 40 சத விகிதம் வசூலிக்கிறார்கள். ஆனால் வட ஆற்காடு மாவட்டம் பொருளாதார அடிப்படையிலே மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. ஆகையால் இதைப் பிற்பட்ட பகுதியாகப் பிரித்து 35 ரூபாய் வசூலிக்கக் கூடாதா ?

THE HON. SRI V. RAMAIAH : பிற்பட்ட பகுதி முற்பட்ட பகுதி என்பது பொறுப்புள்ள குழு ஆராய்ச்சி செய்த பிறகுதான் ஏற்படுத்தப்பட்டது. இரண்டு நாளைக்கு முன்பு கனம் அங்கத்தினர் அவர்கள் பேசும்போது கூட மின்சாரத்தை மனதில் கொண்டு பல பாகங்களில் தண்ணீர் இருப்பதினால் மின்சாரத்தை விஸ்தரிக்க வேண்டுமென்றும், அதற்கு விசேஷ சலுகை காட்டி துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். அப்படியிருக்கும்போது வட ஆற்காடு மாவட்டத்தை பிற்பட்ட பகுதி என்று சொன்னால் நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். அந்த வளமாக இருப்பதனால்தான் துரிதமாக மின்சாரம் விஸ்தரிக்கப்பட வேண்டுமென்று கனம் அங்கத்தினரே ஒப்புக்கொண்டார். தஞ்சை ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வட ஆற்காடு உணவு உற்பத்தி செய்கிறது என்று சொன்னார். வட ஆற்காடு பூராவும் முற்போக்கான பகுதி என்றுதான் சொல்லவேண்டும்.

---

a Printed as Appendix I on pages 432–433 infra.

14th March 1961]

Sri V. K. KRISHNAMURTHY : ரெமுனரேஷன் போதிய அளவிற்கு இருந்தாலும்கூட பல இடங்களில் விஸ்தரிக்கப்படாமல் இருக்கிற காரணத்தால் ரெமுனரேஷன இருக்கின்ற பகுதிக்கு மின்சாரம் தனியார் வழங்காமல் இருப்பதால் வரையில் வழங்கும்படியான துரித நடவடிக்கை எடுக்க தனியாருக்கு அரசாங்கம் ஆணையிட முன்வருமா ?

The Hon. Sri V. RAMAIAH : மின்சாரத்தைப் பொறுத்தவரையில் வட ஆற்காடு மாவட்டம் பொருத்தமட்டில் கிராம மின்சார விஸ்தரிப்பு லைசென்ஸ் பகுதியிலே நன்றாக ஆராய்ந்து எங்கெங்கே தாமதம் ஏற்படுகிறதோ அதையெல்லாம் கவனித்து துரித நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு முயற்சிக்கிறோம்.

Water-supply Scheme (Kanyakumari and Suchindram)

* 805 Q.—Sri T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state the steps taken to provide water-supply to the Kanyakumari and Suchindram villages?

The Hon. Sri M. A. MANICKAVELU : The Water-supply Scheme in respect of Kanyakumari is in an advanced stage of execution and will be brought into beneficial use by the end of March 1961.

The works connected with the Suchindram Water-supply Scheme have been completed and handed over to the Suchindram Panchayat. This will be brought into beneficial use, shortly.

It may be added that water is being supplied through a few taps in both the above places.

Sri T. S. RAMASWAMI : As early as three years back, the pipes have been laid and the taps have been made all right. But still for the last three years, water has not been let in. Fifty per cent of the contribution has been given by the people themselves. Everything is over. When such is the case, may I know the reasons for the delay? Agreement with regard to rates has also been reached between the panchayat and the municipality? What is the reason for the delay?

The Hon. Sri M. A. MANICKAVELU : I do not know to which the hon. Member is referring whether Cape Comorin or Suchindram?

Sri T. S. RAMASWAMI : Suchindram.

The Hon. Sri M. A. MANICKAVELU : The hon. Member says some amount was paid. I find that the scheme has been taken up under National Water-supply Scheme. That means only 5 per cent is expected from the beneficiaries. If the hon. Member puts a separate question I will give a detailed answer.

Sri T. S. RAMASWAMI : May I know whether Government are afere of the fact that more delay means the more the reputation of Government in general and the department in particular is at stake?